DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.335/2005**

**P.W.8**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | பழனிச்சாமி |
| Father Name | : | மாணிக்கவாசகம் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 71 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

( 6 மற்றும் 7 எதிரிகள் ஆஜர். 1 வது எதிரி ஆஜர் இல்லை. 1 வது எதிரிசார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 4வது எதிரி இறப்பு)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் முன்பு காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 30.06.2001ம் வருடம் அண்ணாநகர் காவல்நிலைய சட்ட ஒழுங்கு பிரிவில் காவல் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தேன். அன்று நான் நிலையத்தில் ஆஜரில் இருந்த போது 15.30 மணிக்கு அண்ணாநகர் காவல்நிலைய ஆய்வாளர் **அ.சா.2** திரு. வானுமாமலை அவர்கள் வலது காதில் இரத்த காயத்துடன் ஆஜராகி அதில் பி7 திடீர்நகர் காவல்நிலைய ஆய்வாளர் **அ.சா.1** திரு.கிருஷ்ணன் அவர்கள் ஆஜரப்படுத்திய எதிரிகளில் 4வது எதிரி பர்மா கண்ணன் என்பவர் தன்னை கல்லால் எறிந்து காயம் ஏற்படுத்திவிட்டதாகவும், மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் கண்ணாடி, ஜன்னல் கதவுகளை அடித்து உடைத்தும் சேதப்படுத்தியதாகவும் கொடுத்த புகாரை பெற்று பி16 அண்ணாநகர் காவல்நிலைய குற்ற எண்.796/2001 பிரிவுகள் 147, 353, 332 மற்றும் 3(1) of TNPPDL Act ன்படி வழக்கு பதிவு செய்தேன். அதன் அசலை நீதித்துறை நடுவர் எண்.7 மதுரை அவர்களுக்கும் மற்ற நகல்களை அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். காவல் ஆய்வாளரை மருத்துவ சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு

அனுப்பி வைத்தேன். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்தது தான். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேல் விசாரணைக்காக மேல் அதிகாரிகளின் உத்தரவுபடி கே.புதூர் ஆய்வாளர்களிடம் ஒப்படைத்தேன். என்னை காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரித்தார்கள்.

**<u>1, 6 மற்றும் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

தடுப்பு காவலில் கைது செய்யப்பட்ட எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நீதிமன்றம் கொண்டு வந்த போது அவர்கள் நீதிமன்ற வளாக சொத்துக்களை சேதப்படுத்தியதாக வழக்கு என்றால் சரிதான். எதிரிகள் தடுப்பு காவலில் கொண்ட வந்ததற்கான ஆவணங்கள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதா என்றால் இல்லை. எதிரிகளை தடுப்பு காவலில் கொண்டு வந்தற்கான ஆவணங்களை பார்த்தால் தான் எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்திற்கு கொண்டு வரப்பட்டார்களா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். காவல்துறை ஆய்வாளர் திரு.வானுமாமலை அவர்கள் பணியில் இருந்த போது வழக்கு சம்பவம் நடந்தது என்பது அரசு தரப்பு வழக்கு. பொதுவாக ஒரு காவல்துறை அலுவலர் காவல்நிலையத்திற்கு வெளியில் பணியில் இருக்கும் போது, சம்பவம் எதுவும் நடைபெற்றால் அதுகுறித்து சம்மந்தப்பட்ட காவல்துறைக்கு தனி அறிக்கை சமர்பிக்க வேண்டும் என்றால், சரியல்ல. பொதுவாக அவ்வாறு தனி அறிக்கை கொடுக்கப்பட்டால் அந்த அலுவலரின் மேல் அதிகாரி தான் அந்த வழக்கை விசாரணை செய்ய வேண்டும் என்றால், சரியல்ல. பொதுவாக புகார்தாரரிடம் முதல் தகவல் அறிக்கையின் அச்சு படிவத்தின் நகலை வழங்கி அவரிடம் கையொப்பம் பெற வேண்டும் என்றால் சரிதான். அ.சா.ஆ.4 அச்சு படிவத்தில் புகார்தாரிடம் நகல் வழங்கப்பட்டதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் காவல்துறை ஆய்வாளர்

திரு.வானுமாமலை அவர்கள் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும், இந்த வழக்கு புகாரும் மற்றும் முதல் தகவல் அறிக்கையும் பொய்யாக வழக்கிற்கு ஏற்றவாறு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேலும் காவல்நிலையத்தில் இருந்து நீதிமன்றம் அரை கி.மீ என்றால் சரிதான். மேலும் 30.06.2001ம் தேதி மதியம் 02.15 மணியளவில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கதக்க வழக்கு என்றால் சரிதான். மேற்படி அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டிய வழக்குகளில் காலதாமதமின்றி உடனடியாக ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கை 01.07.2001ம் தேதி மாலை 04.00 மணிக்கு பெறப்பட்டதாக நீதித்துறை நடுவர் அவர்கள் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேலஅதிகாரியின் தூண்டுதலின் பேரில் எதிரிகள் மீது இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் காவல்நிலையத்திற்கு வழக்கு பதிவு செய்யும் போது கொண்டுவரப்பட்டார்கள். மேலும் எதிரிகளை புலன் விசாரணை அதிகாரி நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார்.

**மறு விசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.16 18:49:10 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.